# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 01.08.2018

**தமிழக நிகழ்வுகள்**

- பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, அவர்களை மேம்படுத்தும் விதமாக சென்னை மெட்ரோ வழித்தடத்தில் உள்ள ஷெனாய் நகர், கோயம்பேடு ஆகிய இரண்டு மெட்ரோ இரயில் நிலையங்கள் முழுக்க முழுக்க பெண்களால் நிர்வகிக்கப்படுகின்றன.



- சென்னை தரமணியில் உள்ள எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில், 'ஊட்டச் சத்துக்கான வேளாண் முறை'' என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு தலைமையில் நடைபெற்றது.



## இந்திய நிகழ்வுகள்

- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரின் கோட்டை, மதில் சுவர்கள் மிகுந்த நகரம் என இந்தியாவின் அடுத்த உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்றதாக அறிவிக்கப்படவுள்ளது.
    - இந்தியாவில் ஏற்கெனவே 37 இடங்கள் உலக பாரம்பரிய சின்னங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- **யுனெஸ்கோ**
    - ஐக்கிய நாடுகளின் அவையில் முக்கிய துணை நிறுவனங்களில் ஒன்று. 1945ம் ஆண்டு நவம்பர் 16ம் தேதி இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது.
    - இதன் உறுப்பு நாடுகளுக்கிடையே கல்வி, அறிவியல், பண்பாடு மற்றும், தொடர்புத் துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவித்து வருகிறது.



- நாட்டில் முதன் முறையாக பழங்குடியின மக்களின் மொழி, பாலின விகிதம், கல்வியறிவு, கலை மற்றும் கலாச்சாரம் போன்றவை அடங்கிய ‘பழங்குடியின வரைபடத்தை’ ஒடிஷா மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- **குறிப்பு**
    - நாட்டில் அதிக பழங்குடியின மக்களை கொண்ட மாநிலங்களில் மத்தியப் பிரதேசத்தை அடுத்து ஒடிஷா 2வது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## உலக நிகழ்வுகள்

- இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையே கையெழுத்தான ஒப்பந்தங்கள்
  - வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறையில் ஒத்துழைப்பு
  - கைவினை தொழில்கள் திறனில் சிறப்புத் தகுதி பெறுவதற்கான ‘காந்தி, மண்டேலா’ மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம்.
  - விண்வெளியை அமைதி நோக்கங்களுக்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்கும் தென்னாப்பிரிக்க தேசிய விண்வெளி முகமைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.



## விளையாட்டு நிகழ்வுகள்

- அமெரிக்காவில் நடைபெற்ற அட்லாண்டா ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜான் இஸ்னர் (அமெரிக்கா) என்பவர் சக நாட்ட வீரர் ரையான் ஹாரிசனை வென்று சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

We Shine Academy™

- ஆசிய கண்டத்தின் மிகப் பெரிய விளையாட்டு திருவிழாவான ‘ஆசிய விளையாட்டு போட்டிகள் - 2018’ ஆனது இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகர்த்தா மற்றும் தென் சுமத்ரா தலைநகர் பாலேம்பங்கில் ஆகஸ்ட் 18ம் தேதி முதல் நடைபெறவிருக்கிறது.
    - ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இரண்டு நகரங்களில் நடைபெறுவது இதுவே முதல் முறை.




**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- குவாண்டம் கொள்கை பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்காக உலகில் அதிவேகமாக சுழலும் கருவியை மூன்று பல்கலைக்கழக (பர்டியூ, பெக்கிங், ஷிங்குவா) ஆராய்ச்சியாளர்கள் இணைந்து கண்டுபிடித்துள்ளனர்.
    - இக்கருவியின் சுழலி ஒரு நிமிடத்தில் சுமார் 6000 கோடி முறை சுழலும் படி வடிவமைக்கப்பட்டுள்ளது.




We Shine Academy TM

## விருதுகள்

- மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர் குலாம் நபி ஆசாத், மணிப்பூர் ஆளுநர் நஜ்மா ஹெப்துல்லா உள்ளிட்ட 5 பேருக்கு சிறந்த நாடாளுமன்றவாதி விருதுகளை குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் வழங்கியுள்ளார்.
- **சிறந்த நாடாளுமன்றவாதி விருதுகள்**
  - நஜ்மா ஹெப்துல்லா(2013ம் ஆண்டிற்கான விருது)
  - தேவ் நாராயணன் யாதவ் (2014)
  - குலாம் நபி ஆசாத் (2015)
  - தினேஷ் திரிவேதி (2016)
  - பத்ருஹரி மகதாப் (2017)



- மறைந்த முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி பெயரில் வழங்கப்படும் ராஜிவ் காந்தி சத்பாவனா விருதுக்கு மகாத்மா காந்தி பேரனும் மேற்கு வங்கத்தின் முன்னாள் கவர்னருமான கோபால கிருஷ்ணன் காந்தி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



WeShine Academy™